بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/05/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

✪ ஹஸ்ரத் அபூ ஸலமா (ரலி) அவர்களின் போர்ப்படை, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களின் போர்ப்படை மற்றும் ரஜீஹ் போர்ப்படை ஆகியவற்றின் ஒளியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்று அம்சங்களின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குறிப்பு

✪ இறைவழியில் சிறைசென்றவர்கள் மற்றும் பாலஸ்தீனத்தின் அநீதிகுள்ளாக்கப்பட்டவர்களுக்காக துஆவிற்கான வலியுறுத்தல்

أَشۡهَدُ أَنۡ لَّاۤ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿١﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿٢﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿٣﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿٤﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿٥﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿٧﴾

இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தின் சில போர்ப்படைகள் பற்றி எடுத்துக் கூறுவேன். இது தொடர்பாக முதலில் பனூ அஸத் கோத்திரத்தின் தீங்கிழைத்தல் மற்றும் அபூ சலமாவின் ஸரிய்யா பற்றி கூறப்படும். 'ஸரிய்யா' என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாமே நேரடியாக கலந்து கொள்ளாமல், பிறரைப் போர்ப் பணிக்காக அனுப்பி வந்ததற்குக் கூறப்படும் சொல்லாகும். இவற்றிலும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில அம்சங்கள் அன்னாருடைய நுட்பமான அறிவு, அன்னார் முஸ்லிம்களைத் தற்காப்பதற்கு மேற்கொண்ட வழிமுறை மற்றும் பகைவர்களுக்காக அனுதாபத்தை வெளிப்படுத்தியமை மற்றும் ஹுஸூர் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி ஆகியவை தெளிவுபடத் தெரிகின்றன.

**அபூ ஸலமா போர் ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் ஹுஸூர் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரி வழிவந்த சகோதரரும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் பால்குடி சகோதரருமான ஹஸ்ரத் அபூ சலமா பின் அப்தில் அஸத் மஃஹ்ஸூமீ (ரலி) அவர்களின் தலைமையில் நடைபெற்றது.** அவர்கள் பத்ர் மற்றும் உஹுது போர்களிலும் கலந்து கொண்டிருந்தார்கள்.

இந்தப் போரின் பின்னணி இவ்வாறு இருக்கிறது: உஹுது போரின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகளினால், மதீனாவில் வாழ்ந்து வந்த நயவஞ்சகர்கள், யூதர்கள் மற்றும் மதீனாவுக்கு அக்கம்பக்கம் வாழ்ந்து வந்த கோத்திரங்களின் உள்ளத்திலும், முஸ்லிம்களை விரைவில் ஒழித்துக் கட்டுவதற்குத் திட்டம் வகுக்கலாம் என்ற சிந்தனைகள் வரத் துவங்கின. எல்லாருக்கும் முதலாக பனூ அஸத் பின் ஃஹுஸைமா (கோத்திரம்) முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க திட்டம் வகுத்தது. இந்தக் கோத்திரத்தின் தலைவர் துலைஹா பின் ஃஹுவைலத் மற்றும் அவருடைய சகோதரன் சல்மா ஆகிய இருவரும் மக்களை ஒன்றுதிரட்டி ஒரு படையை ஆயத்தம்

செய்தார்கள். பனூ அஸத் கோத்திரத்தின் ஒரு மனிதன் கைஸ் பின் ஹாரிஸ் பின் உமைர் தனது சமுதாயத்திற்கு முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கக்கூடாது என்று அறிவுரை கூறினான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்தத் தாக்குதல் பற்றிய தகவல் கிடைத்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த மக்கள் தாக்குதல் தொடுப்பதற்கு முன்னரே சுயமே முஸ்லிம்கள் தங்களது பாதுகாப்பிற்காக அவர்களுடைய பகுதி மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். எனவே, ஹுஸூர் (ஸல்) அவர்கள் அந்தக் கோத்திரங்களை வேரறுப்பதற்காக, 150 சஹாபா பெருமக்களைக் கொண்ட படையை அனுப்பி வைத்து விட்டார்கள்.

இந்தப் படை தனது போர்த்திட்டத்தை மறைமுகமாக வைத்தவாறு, நான்கு நாள் பயணத்திற்குப் பிறகு கதன் மலைக்கு அருகில் பனூ அஸத் பின் ஃஹுஸைமாவின் நீரூற்றைச் சென்றடைந்து விட்டார்கள். அங்கு சென்றடைந்ததுமே தாக்குதல் தொடுத்து அவர்களுடைய கால்நடைகளைக் கைபற்றிக் கொண்டார்கள்; மேலும், அவர்களுடைய மேய்ப்பாளர்களில் மூவரைப் பிடித்துக் கொண்டார்கள். மற்றவர்கள் தப்பி ஓடுவதில் வெற்றி கண்டு விட்டார்கள். தப்பி ஓடியவர்கள் பனூ அஸதுக்குத் தாக்குதல் பற்றிய செய்தியைத் தெரிவித்தவாறு பெரிதும் மிகைப்படுத்திக் கூறினார்கள். மேலும், முஸ்லிம்களின் படையின் எண்ணிக்கையை மிகவும் அதிகமாக மிகைப்படுத்திக் கூறினார்கள். அதனால் பனூ அஸத் (கோத்திரத்தினர்) அச்சத்திற்குள்ளானார்கள். இங்கும் அங்கும் ஓடி விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ சலமா அவர்கள் அவர்களைத் தேடுவதற்குத் தம் தோழர்களை அனுப்பினார்கள். முஸ்லிம்களுக்கு யாரும் எதிர்ப்படவில்லை. அன்னார் (ரலி) முழு போர்ச்செல்வத்திலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக ஐந்தில் ஒரு பங்கை தனியாக எடுத்து வைத்தார்கள். மீதமிருந்த போர்ச் செல்வங்களை சஹாபா பெருமக்கள் மத்தியில் பிரித்துக் கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ சலமா அவர்களின் வஃபாத் தொடர்பாக இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அவர்கள் மதீனாவுக்குத் திரும்பிய போது, உஹுது போரில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த காயம் மீண்டும் புத்துயிர் பெற்று விட்டது. அதனால் அவர்கள் நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். மேலும், அதே ஆண்டு ஜமாதில் ஆகிர் மாதம் 3 ஆம் நாள் வஃபாத் ஆகி விட்டார்கள்.

துலைஹா பின் ஃஹுவைலத் எனும் பனூ அஸத் கோத்திரத்தின் எந்தத் தலைவரைப் பற்றி கூறப்பட்டிருந்ததோ அவர் பின்னர் முஸ்லிம் ஆகியிருந்தார். ஆனால், பிறகு முர்தத் ஆனார். அதற்கும் மேற்பட்டு, பொய் நபித்துவ வாதம் புரிந்து கூச்சல் குழப்பங்களுக்கு காரணமாக அமைந்தார். ஆனால், தோல்வியைத் தழுவி அரேபியாவில் இருந்து ஓடி விட்டிருந்தார். பிறகு, சிறிது காலம் கழித்து தவ்பா செய்து இஸ்லாமிய போர்களில் பங்கு பெற்று தமது வீரத்தின் திறமையைக் காட்டினார். மேலும், ஹிஜ்ரீ 21 ஆம் ஆண்டு ஒரு போரில் ஷஹீது ஆகும் தரத்தைப் பெற்றார். எல்லாம் வல்ல

அல்லாஹ் அவருடைய முடிவை நல்லதாக ஆக்க இருந்தான். எனவே, அவருக்கு நல்வாய்ப்பு கிடைத்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

**அடுத்து, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்களின் போர்ப்படை பற்றிய குறிப்பு உள்ளது.** ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் உக்பா சானியா பைஅத், பத்ர், உஹுது மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே கலந்து கொண்ட இதர போர்களில் கலந்து கொண்டார்கள். அவர்கள் சிரியாவில் ஹிஜ்ரீ 54 ஆம் ஆண்டு, அல்லது சில அறிவிப்புகளுக்கு ஏற்ப, ஹிஜ்ரீ 74 ஆம் ஆண்டு வஃபாத் ஆனார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு முஹர்ரம் மாதத்தில் இந்தப் போர் நடந்ததாக இதன் விவரத்தை இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

குறைஷியர்களின் ஆத்திரமூட்டல் மற்றும் உஹுது போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தற்காலிக தோல்வி ஆகியவை இப்பொழுது மிகவும் வேகத்துடன் தனது பயங்கரமான விளைவுகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. எனவே, பனூ அஸத் மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு ஆயத்தம் மேற்கொண்டிருந்த அதே நாள்களில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பனூ லஹ்யான் கோத்திரத்தின் மக்கள் தங்களுடைய தலைவன் சுஃப்யான் பின் காலிதின் தூண்டுதலினால் மக்காவுக்கு அருகில் இருந்த ஓர் இடமான தங்களது ஊர் 'உர்னா'வில் ஒரு மிகப் பெரும் படையைத் திரட்டுகிறார்கள் என்றும், மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதுதான் அவர்களுடைய எண்ணம் என்றும் தகவல் கிடைத்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் அதிகமாக சந்தர்ப்பம் அறிந்தவர்களாகவும், அரேபியாவின் பல்வேறு கோத்திரங்களின் நிலைமை, அந்தத் தலைவர்களின் ஆற்றல் மற்றும் செல்வாக்கு பற்றி மிக நன்றாக அறிந்து வைத்தவர்களாகவும் இருந்தார்கள். அன்னார் இந்த செய்தி கிடைத்ததுமே இந்த அனைத்துத் தீங்கிழைத்தலும், குழப்பம் விளைவித்தலும் பனூ லஹ்யான் உடைய தலைவன் சுஃப்யான் பின் காலித் உடையதாகும் என்பதையும், அவன் நடுவில் இல்லாமல் போனால் பனூ லஹ்யான் (கோத்திரத்தினர்) மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்குத் துணிச்சல் கொள்ள முடியாது என்பதையும் புரிந்து கொண்டார்கள்.

சுஃப்யானைத் தவிர அந்தக் கோத்திரத்தில் தற்பொழுது இது போன்ற திட்டத்திற்குத் தலைவன் ஆகக்கூடிய செல்வாக்கு பெற்ற மனிதன் யாருமில்லை என்பதையும் அன்னார் அறிந்திருந்தார்கள். எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் படைக்குழுவை அனுப்புவதனால், ஏழை முஸ்லிம்கள் துன்பத்தில் ஆழ்வதற்கும், நாட்டில் அதிகம் இரத்தம் சிந்துவதற்கான கதவு திறப்பதற்கும் உள்ள சாத்தியக்கூறை முன்னிறுத்தி இவ்வாறு முடிவெடுத்தார்கள்:

யாராவது ஒருவர் செல்ல வேண்டும். மேலும், சந்தர்ப்பம் பார்த்து, இந்தக் குழப்பத்தைத் தோற்றுவித்தவனான, இந்தத் தீங்கின் ஆணிவேரான சுஃப்யான் பின் காலிதைக் கொன்று விட வேண்டும்.

எனவே, பெருமானார் (ஸல்) அந்த இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் அன்ஸாரி (ரலி) அவர்களை அனுப்பி

வைத்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் பனூ லஹ்யானின் முகாமை சென்றடைந்தார்கள். அந்த மக்கள் உண்மையிலேயே மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கான ஆயத்தத்தில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்கள். இந்த சஹாபி இரவு நேரத்தில் சந்தர்ப்பம் பார்த்து சுஃப்யானுக்கு முடிவுகட்டி விட்டார்கள். பனூ லஹ்யானுக்கு இது தெரிய வந்த போது, அவர்கள் அப்துல்லாஹ் (ரலி) அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்தான்; ஆனால், அவர்கள் ஒளிந்து மறைந்து தப்பி ஓடி வந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உனைஸ் (ரலி) அவர்கள் வந்த போது, அன்னார் அவர்களது முகத்தைப் பார்த்தே வெற்றி பெற்று வந்துள்ளார்கள் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்கள். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களைப் பார்த்த உடனேயே 'அஃப்லஹல் வஜ்ஹ்' என்று கூறினார்கள். அதாவது, இந்த முகமோ வெற்றி பெற்றதாகத் தென்படுகிறது.

அதற்கு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள். மேலும், பணிவுடன் என்னே அருமையாக கூறினார்கள் பாருங்கள்: 'அஃப்லஹ வஜ்ஹுக்க யா ரஸூலல்லாஹ்.' அதாவது, யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} எல்லா வெற்றிகளும் தங்களுடையவையே ஆகும். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது கைத்தடியை அப்துல்லாஹ் (ரலி) அவர்களுக்குப் பரிசாக வழங்கினார்கள். மேலும், 'இந்தத் தடி உமக்கு சொர்க்கத்தில் கைதாங்கிக் கொள்ள உதவும்' என்று கூறினார்கள். அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் இந்தத் தடியை மிகவும் அன்போடும், கலப்பற்ற தன்மையோடும் தம்மிடம் வைத்திருந்தார்கள். மேலும், மரணிக்கும் தருவாயில், அதைத் தம்முடனேயே புதைத்து விட வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார்கள். எனவே, இவ்வாறே செய்யப்பட்டது.

அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் வெற்றிபெற்று திரும்பிய போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திய அந்த மகிழ்ச்சி மற்றும் அவர்களுக்கு அசாதாரணமான முறையில் வழங்கிய பரிசு ஆகியவற்றின் மூலம், அன்னார் சுஃப்யான் பின் காலிதின் குழப்பம் விளைவித்தலை மிகவும் பயங்கரமானதாகக் கருதி வந்தார்கள் என்பதும், அவனைக் கொல்வதை பொது அமைதி ஏற்படுவதற்கு ஒரு கருணையின் காரணியாகக் கருதி வந்தார்கள் என்பதும் தெரியவருகிறது.

பகைவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அன்னார் அமைதியை சீர்குலைத்தார்கள் என்றும் மனித உயிர்களைக் கொல்லச் செய்தார்கள் என்றும் பழிசுமத்துகிறார்கள் - நவூதுபில்லாஹ். அன்னார் மனித உயிர்களைக் கருத்தில் கொண்டதன் நிலையோ இதுவாகும்: எதிரி கோத்திரங்களின் மக்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக, அவர்களின் மற்ற மக்கள் தப்பித்துக் கொள்ளும் பொருட்டு, ஓர் உயிரைக் கொல்வது சிறந்ததாகும் என்ற சாதுரியமான செயலை மேற்கொண்டார்கள். இது மனித அனுதாபத்தின் உச்சகட்டம் ஆகும்.

இன்றைய காலத்து பெயர்தாங்கி உலகத்தினர் சில மக்களைக் கொல்கிறோம் என்ற சாக்கில் அப்பாவி குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களைக் கொலை செய்கிறார்கள். மேலும், இதுவோ போரில் நடக்கத்தான் செய்யும் என்று மிகவும் இறுமாப்புடன் கூறுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ, 'எந்த ஒரு குழந்தையையும், வயது முதிர்ந்தவரையும், பெண்ணையும், நேரடியாக போரில் ஈடுபட்டிருக்காத மத ரீதியான எந்த நபரையும் கொல்லக்கூடாது' என்று முறையாக போரிலும் கட்டளை பிறப்பித்து வந்தார்கள். ஆக, இதுதான் முஹம்மத் (ஸல்) அவர்களின் மற்றும் இஸ்லாமிய போதனையின் அழகிய முன்மாதிரியாகும்.

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ரஜீஹ் போர் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள்:* அதன் விபரம் நீளமானது. எனவே, இன்று சில பகுதியை எடுத்து வைப்பேன். இந்தப் போர் ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு சஃபர் மாதம் ரஜீஹ் பக்கம் முன்வந்தது. நமது **Research Cell** ரஜீஹ் போர் தொடர்பாக ஒரு குறிப்பைக் கொடுத்துள்ளார்கள். அது இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியதாகும். அதாவது, இதில் சில தேதிகள் மாறுபடுகின்றன. பெரும்பாலான வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் ரஜீஹ் போரின் தேதியை ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு சஃபர் மாதம் என்று எழுதுகிறார்கள்.

மேலும், அதன் விபரம் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது: ஹஸ்ரத் ஃஹுபைப் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸைத் (ரலி) ஆகிய இருவரும் மக்காவில் விற்கப்பட்டார்கள். ஆனால், கண்ணியத்திற்குரிய மாதங்கள் துவங்கி விட்டதனால், மக்கத்தினர் இவர்களை சிறைவாசத்தில் வைத்திருந்தனர். கண்ணியத்திற்குரிய மாதங்கள் முடிவடைந்தவுடன் அவர்கள் இருவரையும் கொன்று விட்டார்கள்.

இந்தப் போர் ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு சஃபர் மாத்தில் நடந்ததாக ஏற்றுக் கொண்டால், பிறகு கண்ணியத்திற்குரிய மாதங்கள் துவங்கி விட்டிருந்தன என்று கூறுவது அறிவுக்குப் புறம்பானதாகும். எனவே, இந்தப் போர் ஹிஜ்ரீ 3 ஆம் ஆண்டு ஷவ்வாலின் கடைசி நாள்களில் நடந்தது என்பதே அதிகம் சரியாகத் தெரிகிறது. ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு சஃபர் மாதத்தில் ஹஸ்ரத் ஃஹுபைப் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஸைத் (ரலி) ஆகியோர் ஷஹீது ஆக்கப்பட்டார்கள். அவர்களது ஷஹாதத் செய்தி மதீனா வந்தடைந்த போது, அறிவிப்புகளில் இந்தத் தேதி மெதுமெதுவாக அதிகம் மேலோங்கி விட்டது. எவ்வாறு இருப்பினும், அல்லாஹ்வே நன்கறிவான்.

இந்தப் போர் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பனூ லஹ்யானின் தலைவன் கொல்லப்பட்டதனால் இந்தக் கோத்திரம் பழிவாங்கும் நெருப்பில் எரிந்து கொண்டிருந்தது. மேலும், முஸ்லிம்களைப் பழிவாங்குவதற்கான வழிமுறை பற்றி யோசித்துக் கொண்டிருந்தது. எனவே, முறையாக ஒரு திட்டம் வகுத்து அஸ்ல் மற்றும் காரா கோத்திரத்தின் சில மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான சபைக்கு வந்து இவ்வாறு கேட்டுக் கொண்டார்கள்: எங்களுடைய கோத்திரத்தில் இஸ்லாம் பெரிதும் பிரசித்தி பெற்றுள்ளது. எனவே, அங்கு இஸ்லாத்தின் பால் அழைக்கும் பணியை

மேற்கொள்வதற்காக தாங்கள் தங்களுடைய சில மக்களை எங்களுடன் அனுப்பி வையுங்கள்.

கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்கள் அவர்களுடன் (சில) மக்களை அனுப்பி வைத்தார்கள். வாழ்க்கை வரலாற்றின் பெரும்பாலான நூல்களில் பத்து சஹாபா என்று கூறப்பட்டுள்ளது. ஆயினும், ஏழு சஹாபாவின் பெயர்களே கிடைக்கின்றன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆஸிம் பின் சாபித் (ரலி) அவர்களையோ அல்லது மர்ஸத் பின் அபீ மர்ஸத் (ரலி) அவர்களையோ அமீராக நியமித்தார்கள். பிறகு, அடுத்து உள்ள நிகழ்வுகளை இனி எடுத்துரைப்பேன். இன் ஷா அல்லாஹ்.

*குத்பாவின் இறுதியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆவிற்காக எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:* இன்று நான் மீண்டும் ஏமன் நாட்டின் இறைவழியில் சிறை சென்றவர்களுக்காக குறிப்பாக துஆவுக்காக கூற விரும்புகிறேன். குறிப்பாக, அங்கு லஜ்னா தலைவியாகவும் இருக்கும் அந்தப் பெண்மணிக்காகக் கூற விரும்புகிறேன். இவர்களை மிகவும் சிரமத்தில் வைத்துள்ளார்கள்; சிறைவாசத்தில் வைத்துள்ளார்கள். மேலும், அவர்களுடைய பேச்சைக் கேட்க ஆயத்தமாக இல்லாத இன்னும் சிலரையும் கைதிகளாக ஆக்கி வைத்துள்ளார்கள். அவர்களுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்கள் விடுதலை ஆவதற்கான ஏற்பாட்டைச் செய்தருள்வானாக.

பாக்கிஸ்தானின் இறைவழியில் சிறைசென்றவர்களின் விடுதலைக்காகவும் துஆ செய்யுங்கள். பாலஸ்தீனத்து மக்களுக்காகவும் துஆ செய்து கொண்டே இருங்கள். நிலைமை சீரடைவதாகவும்; மீண்டும் சீர்கெட்டுப் போவதாகவும் தென்படுகிறது. இஸ்ரேஸ் அரசு இறுமாப்புடன் செயல்படுகிறது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு அவர்களது அநீதியிலிருந்து விரைவில் விடுதலையை வழங்குவானாக! முஸ்லிம்களுக்கும் தங்களுடைய உரிமையை நிறைவேற்றுவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُہٗ وَنَسْتَعِيْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**